International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 04 October to December 2021 www.irjtsjournal.org

# சித்த வைத்திய மரபில் தேரையரின் வகிபாகம்

திருச்செல்வம் கிஷாந்தினி,

*இந்துநாகரிகம் சிறப்புக்கலை,*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

***ஆய்வுச் சுருக்கம்***

இந்துப் பண்பாட்டு வரலாற்றில் இந்துக்களின் மருத்துவப் பாரம்பரியத்துக்கும் தனித்த இடமுண்டு. நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பிரிக்க முடியாதவைகளாகும். ஒவ்வொரு மனித சமுதாயமும் தனக்கென ஒரு மருத்துவ அமைப்பு முறையைக் கொண்டுள்ளது. இந்துக்களைப் பொறுத்தவரையில் ஆயர்வேதம், சித்த மருத்துவம் என இருபெரும் அறிவுப்புலங்களாக வளர்ச்சியுற்றது. மிகப்பழமையான மருத்துவமுறை என ஆயர்வேத மருத்துவ முறையைக் குறிப்பிடுவர். தென்னிந்திய மரபோடு குறிப்பாக தமிழகத்தின் பதினெண் சித்தர் மரபோடு தொடர்புற்று வளர்ந்த மருத்துவப் புலமாக சித்த மருத்துவம் விளங்குகின்றது. சித்த மருத்துவம் தமிழ் மருத்துவமாகும். தொன்மையுள் தொன்மையான இந்தியப் பெருநாட்டில் அண்மைக்காலம் வரை வெகுவாக வழங்கிவந்த இம்மருத்துவ முறை, இந்துக்களுக்கேயுரிய தனிச்சிறப்பு வாய்ந்தது. பண்டைச் சித்தர்கள் இதனைத் தமிழ்மொழியில் உருவாக்கித் தந்துள்ளனர். உண்மைத் தவநெறியில் பிறழாது உன்னதநிலையில் வாழ்ந்த சித்தர்கள் தங்கள் அருள்ஞான அறிவால் அதனை நன்குணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளனர். அவர்கள் கூற்றுக்கள் அனுமானங்கள் அல்ல. மறுக்கமுடியாத அனுபவ உண்மைகள், நாளுக்கு நாள் மாறக்கூடியவை அல்ல: நாள் எல்லைக்குள்ளும் நாழிகை வரையறைக்குள்ளும் தீர்க்கக் கூடியவை. நவீன மருத்துவ வளர்ச்சிக்கெல்லாம் முன்னோடி தமிழ்ச்சித்தர்கள் கண்ட இலக்கியங்களே. அந்தவகையில், சித்த மருத்துவப் பாரம்பரியத்துக்கு ஒளியூட்டிய பெருமையுடையவராக தேரையர் என்னும் சித்தர் திகழ்கின்றமையானது அடையாளங் காணப்பட்ட நிலையில், இவ்வாய்வுக் கட்டுரையானது அமைந்துள்ளது. இவ்வாய்வுக் கட்டுரையானது முழுக்க விபரண ஆய்வு முறையியலுக்கு அமைவாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. தேவையான சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையியலுக்கு உட்படுத்தி முடிவுகள் பெறப்பட்டன. இன்றைய மருத்துவ உலகில் பயில்நிலையிலுள்ள மருத்துவ முறைகள் தேரையருடைய பனுவல்களில் சொல்லப்பட்டுள்ளதை அடையாளப்படுத்துவதனூடாக சித்த மருத்துவத்துறையில் தேரையரின் வகிபாகம் காத்திரமானது என்பதை வெளிப்படுத்த விழைவாதாகவும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

***திறவுச் சொற்கள் : தேரையர், சித்தர், சித்த மருத்துவம், சிகிச்சை, இந்து அறிவியல்***

***முன்னுரை***

இந்து அறிவியற் புலத்தில் மருத்துவமானது முதன்மையானதாகக் காணப்பட்டது. பண்டைக்கால மருத்துவர்கள் உடல் உறுப்புக்களின் அமைப்புக்களை ஆழமாக அறிந்திருந்தனர். மருந்துகளைப் பற்றிய ஆரம்பகால குறிப்புக்கள் அதர்வ வேதத்தில் காணப்படுகின்றன. கி.பி 02ஆம் நூற்றாண்டில் இந்து சமுதாயத்தில் இரண்டு புகழ் பெற்ற ஆயர்வேத மேதைகள் தோன்றினர். சுஸ்ருதர், சரகர் என்பவர்களே அவர்கள். இந்த ஆயர்வேத மருத்துவம் ஆத்திரேயர் மரபு, தன்வந்திரி மரபு எனும் இரண்டு நிலைகளிலும் வளர்ந்து வந்தது. நோய்கள், அவை

ஏற்படுவதற்கான காரணங்கள், சிகிச்சை முறைகள், மருந்துகள், அறுவைச்சிகிச்சை போன்ற பல அறிவியற் கருத்துக்களை உள்வாங்கிய மருத்துவமாக இந்து மரபில் போற்றப்பட்டு வருகின்றது.

இதேபோலவே, இந்து அறிவியற் சிந்தனைகளை உள்வாங்கிய மருத்துவமாக சித்த மருத்துவமும் வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை சித்தர் மரபுகளுக்கூடாக விளங்கிக் கொள்ளலாம். “சித்தர்களென்பார் பண்டைக் காலத்து அறிஞருள் ஒருசாரார் அவர்க்கு அறிவரென்றே பெயர் அமைந்திருந்தது.” “சித்தர்கள் என்பவர்கள் நமது நாட்டுப் பழம்பெரும் பேரறிவு படைத்த விஞ்ஞானிகளாவர். இவர்கள் தமிழகத்து விஞ்ஞானிகள் மட்டுமன்றி மருத்துவர்களுமாவர்”. பதினெண் சித்தர்கள் எனப் பிற்காலத்தில் அகத்தியர் தொடங்கி வரிசைப்படுத்தப்பட்ட பல சித்தர்கள் தனித்த தன்மையுடைய தத்தமது மருத்துவக் கோட்பாடுகளை முன் வைத்தனர்.

### *சித்த மருத்துவம்*

சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவ முறையாகும். தமிழ் நாட்டுப் பண்டைச் சித்தர்கள் இதனைத் தமிழ் மொழியில் உருவாக்கித் தந்துள்ளார்கள். சித்தர்கள் தங்கள் அருள்ஞான அறிவால் அதனை நன்குணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளனர். சித்த மருத்துவம் எப்போது தோன்றியது என்று வரையறுத்துக் கூறவியலாது. அது பாரம்பரிய மரபு முறைப்படி பரவி வந்துள்ளது. இயற்கையில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வித்து முதலியவைகளைக் கொண்டும், நவரத்தின, நவலோகங்களைக் கொண்டும், இரசம், கந்தகம், கற்பூரம், தாரம், அயம், பவளம், துருசு முதலியவைகளைக் கொண்டும், திரிகடுகு, திரிசாதி, திரிபலை, அரிசிவகை, பஸ்பம், செந்தூரம், மாத்திரை, கட்டுக்கள், பொடிகள், குளித்தைலங்கள், கஷாயங்கள் முதலிய பல பிரிவு வகைகளாக வியாதிகளுக்கு நல்ல தண்ணீர், கடல் நீர், ஊற்று நீர், கிணற்று நீர் முதலிய பல நீர் வகைகளைக் கொண்டும், பால், தேன், சீனி, நெய் முதலியன கொண்டும், தெங்கு, புங்கு, புண்ணை, வேம்பு, எள் முதலிய தாவர எண்ணை வகைகளைக் கொண்டும் உருவாக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையாகும்.

சித்த மருத்துவம் சித்த வைத்தியத்துடன் நின்றுவிடுவதில்லை. சித்த மருத்துவத்தில் சிறந்து விளங்கும் மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம், உடல் தத்துவம், சமயம், சோதிடம், பஞ்சபட்சி, சரம், மருந்து, மருத்துவம், பரிகாரம் போன்ற ஐயந்திரிபறக் கற்றுணர வேண்டும்.

**“சோதிடம், பஞ்சபட்சி துலங்கிய சரநூல் மார்க்கம்**
**கோதறு வகார வித்தை**
**குருமுனி ஓது பாடல்**
**தீதிலாக் கக்கிடங்கள்**
**செப்பிய கன்ம காண்டம்**
**ஈதெலாம் கற்றுணர்ந் தோர்**
**இவர்களே வைத்தியராவர்”** (சித்தர் நாடி நூல்)

என சித்தர் நாடி நூல் கூறுகிறது. இவற்றையெல்லாம் உலகுக்கு உவந்தளித்த சித்தர்களுள் ஒருவராக விளங்கும் தேரையர் கூறும் சித்த மருத்துவம் எத்தகையது என்பது பற்றி நோக்குவோம்.

### *தேரையர் - அறிமுகம்*

அகத்தியருடைய மாணாக்கர்களில் ஒருவராக விளங்கியவர் தேரையர் ஆவார். இவர் மருத்துவ ஞானம் மிகுந்தவர். சித்த வைத்திய முறையில் தேரையர் கண்ட உண்மைகள் பெரிதும் உபயோகமாகின்றன. இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், வடநூல் ஆகிய மொழிப்புலமையும் சோதிடம், ஐம்புள் சாத்திரம், கன்ம காண்டம், அளவை, சாங்கியம், வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய அறிவியல் நூல்களில் மிக்க தேர்ச்சி பெற்றவர்

என்பதும் இவருடைய நூல்களினால் அறிந்து கொள்ளலாம். மருத்துவத்தின் நால்வகை அமைப்பாகிய யோகம், ஞானம், வாதம், வைத்தியம் என்னும் நான்கிலும் உள்ள உட்பிரிவுகளில் நல்ல ஆய்வுத் திறனுடன் கூடிய புலமை பெற்றவராக இவருடைய நூல்கள் மிளிர்கின்றன.

இவருடைய ஞானாசிரியன் தருமசௌமியரென இவருடைய நூல் வாயிலாகத் தெரிகிறது. இவருடைய சீடர் யூகி முனிவர் என்பது யூகி சிந்தாமணி எண்ணூறு என்னும் நூல் வாயிலாக அறியலாம். ஆயினும் தேரையர் நூலில் புலத்தியரின் சீடர் தருமசௌமியர் என்றும், தரும சௌமியரின் மாணாக்கர் என்றும் (சித்த மருத்துவத் தொகுதி 1, ப.236) கூறியுள்ளமை சிந்திக்கற்பாலது.

தேரையர் தொண்டைவள நாட்டில் பாலியாற்றின் வடகரையிலுள்ள திருமலைச்சேரி என்னும் சிற்றூரில் உதித்தவர். இவருடைய தந்தையார் நம்பி பூபதி ஆவார். இவர் மகாபாரதத்தில் மிக்க ஈடுபாடுடையவர் என்பது இவரியற்றிய மருத்துவ பாரதம் என்ற நூலால் அறியலாம்.

தெலுங்குக் கவிஞர் வேமனரைப் பற்றித் தேரையர், "உத்தம மஞ்சிவாரு சுவாமி நீவென வேமனார் வடுகில் உரைத்தல் போல்" என்று தேரையர் கரிசல் என்னும் நூலில் கூறியிருப்பதால், இவர் வேமனார் காலத்தவர் அல்லது அவருக்குச் சற்றே பிற்காலத்தவர் என்று ஊகிக்கலாம். வேமனார் கி.பி. 1486 – 1505 க்கு இடைப்பட்டக் காலத்தவர். மேலும் இந்நூலில் "உருளைக்கிழங்குக் கற்பம்" பற்றிக் கூறியிருப்பதாலும், உருளைக்கிழங்கு தென்இந்தியாவுக்கு வந்தது கி.பி. 16 ஆம் நூற்றாண்டு என்று அறிவதாலும் தேரையர் இக்காலத்திற்குப் பின் வாழ்ந்தவர் (சித்த மருத்துவத் தொகுதி 1, ப.237) என்று கருதலாம். மேலும் தேரையர் இயற்றிய நூல்களின் காப்புச் செய்யுட்களில் பதினெண் சித்தர்களுக்கு வணக்கம் செய்துள்ளமை, இவர் பதினெண் சித்தர்களுள் ஒருவரல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறது. எடுத்துக்காட்டாக,

**"பயப்பட பிரசமுன் பழகு மைச்சுரம்**
**பயப்படு மாறெனப் பதினெண் சித்தர்தான்**
**செயற்படு பொருளினிற் சேர்க்கு முன்னமே**
**செயப்படு மிதற்கொரு திருகின் றாமரோ"** (பதினெண் சித்தர் துதி – மகா கரிசல் தேரையர்)

எனவரும் பாடலைக் காட்டலாம்.

### *தேரையர் இயற்றிய சித்த மருத்துவ நூல்கள்*

மனிதரின் தேக உணர்வையும், குரலின் தன்மையையும் வைத்தே நோய் நிர்ணயம் செய்துவிடும் திறமை பெற்றவர். அவ்வண்ணமே சிகிச்சை முறைகளிலும் இவருக்கு அதிக வல்லமை இருந்தது. இவர் பதினாறு நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் வைத்திய காவியம், இரசவர்க்கம், கருக்கிடை, வைத்திய சிந்தாமணி, மருத்துவ பாரதம் என்பவை குறிப்பிடத்தனவாகும். மேலும், பதார்த்த குண சிந்தாமணி, நீர்க்குறி நூல், நெய்க்குறி நூல், தைலவர்க்கச் சருக்கம், சிகிச்சை ஆயிரம், யமக வெண்பா, நாடிக்கொத்து, நோயின் சாரம், நோயணுகாவிதி, கஷாயம் நூறு, நோய் மருந்தளவை முதலிய நூல்கள் பலவும் உள்ளன. இவற்றோடு சிகாமணி வெண்பா, நிகண்டு, சேகரப்பா, பிரதானகுண மூலித்தரு, கரிசல் போன்ற நூல்கள் உட்பட இருபத்தொரு நூல்களை இயற்றியவராகவும் கருதப்படுகிறார்.

**"சிகாமணி வெண்பா நிகண்டு சேகரப்பா**
**தேரையர் காப்பியந்தரு நாடக மந்தாதி**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2021, IRJTSR 

**மிகா வண்ணம் நாண் மாலை யமக வெண்பா**
**விளங்கெதுகைப் பாயிவை யெல்லோருமெச்சு**
**மகா மகிமைக் கரிசலெனு முறையீராறும்**
**வேதாந்த சித்தாந்த வைத்ய வாத**
**முகாதியினு மசையாத விரிவுள் வேத**
**முத்தமுமா விளங்கு மிது சத்தியந்தானே”** (தேரையர் மகா கரிசல், மூலமும் உரையும், ப.1)

என்னும் செய்யுள் பன்னிரண்டு நூற்களையே விளக்குகின்றது. நீர் நிறக்குறி, நீர் நெய்க்குறி, தைல வருக்கச் சருக்கம், தினக்கிரமாலங்காரம், நோய் மருந்தளவை, சிகிச்சைக் கிரமம் என்பன காப்பியத்துள்ளன என்றும், பிரதான குண மூலித்தருவையே தரு என்றதென்றும், வயித்தியப் பள்ளு நாடகம், மருத்துப் பாரத நாடகங்களையே நாடகமென்றதென்றும் கூறுவர்.

One of the several scholars under studied Tamil medicine under Agestyua. He is the celestial physician. There is also an allusion about his skill in treating diseases. When indira of the celestial world was attacked of incurable head ache, hediagonised the disease and finding a toad lodged inside, he exposed near it a vessel containing water, when the toad on seeing the water, jumped into it. He then closed the skull, and thus he cured the case, there is another version referring to the same case. (Dictionary Based on Indian Medical Science, p.1354)

“தேரனைத் தேரான் மருத்துவத்திற் சேரான்” (சித்த மருத்துவத் தொகுதி 1, ப.237) என்று புகழ்ந்து பாராட்டப்படும் வகையில் சித்த மருத்துவத்திற்கு உரமிட்டுச் சென்றுள்ளார். இதற்கு தேரையரின் சில நூல்களே சான்று பகருகின்றன. அந்தவகையில், தேரையர் யமக அந்தாதி என்னும் நூலானது, நோயாளியின் சாத்திய, அசாத்தியக் குறிகள், கற்ப முறைகள், சரக்குகளின் சுத்தி முறைகள், பற்ப செந்தூர முறைகள், அவைகளின் துணை மருந்துகள், பத்திய வகைகள் முதலியனவற்றை உள்ளடக்கியுள்ளது. தேரையர் வாகடம் என்னும் நூலில் ஆங்காங்கே பற்பல நோய்களின் சிற்சில குணங்கள் காணப்பெறுகின்றன. இதில் கண்ட நோயின் குறிகுணங்கள் பெரிதும் பயன்தரத் தக்கதாய் உள்ளமையைப் படிப்பவர்கள் தெளிவார்கள். இதேபோல தேரையர் வைத்திய காவியம் என்னும் நூலானது, சில நோய்களுக்கான மருத்துவம், பற்பம், ஆசனம் முதலியவற்றைக் கூறியுள்ளது.

வைத்தியம் கற்பதற்கும், மருந்துகளின் செய்முறைகளை அறிவதற்கும் மருத்துவ மாணவன் முதலாவதாகப் படித்தறிய வேண்டியது கருப்பொருள்களைப் பற்றித்தானாகும். அக்கருப்பொருள்களையே தேரையர் வெண்பா உரைத்து நிற்கிறது. இந்நூலின் முதற்பகுதியில் 416 செய்யுட்களில் கருப்பொருள்கள் பற்றியும், இரண்டாம் பகுதியில் உள்ள 342 செய்யுட்களில் முதற்பகுதியில் கூறப்பெற்றக் கருப்பொருள்களின் செய்முறைகள் பற்றியும் இடம் பெறுகின்றன.

இந்நூலில் தேரையர் 419ஆம் செய்யுளில் “முன் சொன்ன வெண்பா முறை நிகண்டும் அச்சொல்லின் …………” எனவரும் வெண்பாவில் “வெண்பா முறை நிகண்டு” என்று கூறுவதால் இந்நூலே அவர் கூறிய பிற மருத்துவ நூல்களுள் வைத்து நிகண்டு என்று அழைக்கப்படுகிறதோ என்ற ஆசங்கை எழுகிறது. இக்கருத்தோடு நூலினை ஆய்ந்து நோக்குவோமெனின் மிகப்பலவான செய்யுட்களில் பரியாயப் பெயர்களுடன் இணைந்துள்ள இயற்பெயர்களை நன்குணரலாம். உதாரணமாக: தோன்றியெனும் காந்தள், காமமெனுந்திப்பிலி, சேர்ந்தாரைக் கொல்லியெனுந்தீ, என்பவற்றைக் கொள்ளலாம். இன்னும் இந்நூலில் வந்துள்ள பரிபாயப் பெயர்களான பரிபாஷைச் சொற்களும் மிகப்பலவாகும். அவற்றுள் சில வருமாறு: மாலெச்சில், மால்மனை, தந்தி, உறைக்கனி, யாமினி, தறிமுதற்கிரிகை, ஐம்முகனார் வெற்றி, தராபதி, காமருபி, திரிபுனா, பாதுகைப்பதம் என்பனவாகும்.

மேலும், நாடிகளின் குணம், அவற்றின் நடை, நோய்களின் சாத்திய-அசாத்தியம், ஐம்பூதக்குணம், தாது, தாவர, சங்கமப் பொருள்களின் சிறப்புப் பண்புகள் ஆகியவைகளும் அங்கங்கே விளக்கப் பெறுகின்றன. நோயினால் அனுசரிக்க வேண்டிய பத்தியம், அனுமானம், மருந்து கொள்ளும் நாள், மாதம், உறைவிடம், தங்கும் நிலம் முதலியனவும் கூறப்பட்டுள்ளன. இங்ஙனமே நோய் தீர்க்கும் மருத்துவர் இலக்கணங்களாக அவர்தம் மதிநுட்பம், நோயறிதிறமை, மருந்தியற்றும் தன்மை, தன்னலம் கருதாமை, நோய் கண்டஞ்சாமை, ஆகியனவும் அவர் கையாளும் கட்டு, களங்கு, இரச குளிகை, பூபதி மாத்திரை, தாளக மாத்திரை போன்ற பலவகை மாத்திரைகள், சந்தனாதி போன்ற தைல வகைகள், மகாவில்வாதி போன்ற இலேகிய வகைகள், காந்தம், அயம், வங்கம், தங்கம், வெள்ளி முதலிய உலோக பற்ப செந்தூரங்களின் செய்முறைகள், எண்ணெய் வகைகள், குடிநீர்கள், கிருதம், வற்றல், வேது, புட்டு, கண்மை, கற்பம், சூரணம், பற்று, வசியம் முதலின பயன்களுடன் கூறப்பெற்றுள்ளதோடு, நஞ்சுகளுக்கு ஏற்ற முறிவுகள், கால்நடை உயிர்களின் நோய்க்குச் சிகிச்சை எனப்பலவகை மருத்துவ நுட்பங்களும் இடம் பெறுகின்றமையினால் இந்நூல் சித்த மருத்துவர்கட்கும் மருத்துவத்துறையில் மேற்படிப்பை மேற்கொள்வதற்கும் முதன்மையாகக் கையாளத்தகும் திறவுகோலாக அமைந்துள்ளது.

*நாடி பார்த்தல் சிகிச்சை முறை*


சித்த மருத்துவத்தில் நாடி பார்த்தல் பிரதானமாகும். மருத்துவனின் மதிநுட்பம் பற்றிக் கூறுகையில் நாடி என்பதன் பொருளையும் சித்தர் கையேடு என்னும் நூல் பின்வருமாறு கூறுகிறது.


**"குணநாடி நோயறிந்து கொண்டு பிணியாளர்**
**குணநாடி ஞாபகமுட் கொண்டு – நிணரா**
**யத்து தணிய மடைவவிழ்ந்த மீயு**
**மதியர் வயித்தியரா வர்"** (சித்தர் கையேடு)

இதிலிருந்து பிணியாளர் குணமறிந்து நோயின் தன்மையை நாடி அறிந்து ஞாபக சக்தியுடன் உள்ளத்திலிருத்தி வைத்துக் கொண்டு அந்நோய் தணிதற்கேற்ற மருந்துகளைக் கொடுத்து நல்ல பயனைப் பெறக்கூடிய மதிநுட்பம் உடையவனே மருத்துவன் என்பது இப்பாடலின் பொருளாகும்.

அறிவியல் தளத்தில் நாடிப் பரீட்சை பிரதானமானது. ஆண்களுக்கு வலது கரமும் பெண்களுக்கு இடது கரமும் நாடி பார்க்க வேண்டும் என சித்த மருத்துவ நூல்கள் இயம்புகின்றன. ஏனெனில் நாடிக் கூர்மமானது பெண்களுக்கு மேல் நோக்கியும் ஆண்களுக்கு கீழ் நோக்கியும் இருப்பதினாலேயே என்று டாக்டர் ம. சண்முகவேலு கூறுகின்றார்.

இவற்றை நவீன மருத்துவத்துடன் ஒப்பிட்டால் இது பிரிமன்தகட்டினையே (Diaphragm) குறிக்கிறது. பிரிமன்தகடு பெண்களுக்கு மேல் நோக்கியும் ஆண்களுக்கு கீழ் நோக்கியும் இருப்பதனை அறியலாம். இதனால் பெண்களுக்கு மேல் மூச்சும் (Thoracic Respiration) ஆண்களுக்கு கீழ் மூச்சும் (Abdomnal Respiration) கூடுதலாகத் தெரியக் கூடியதாயிருப்பதைக் காணலாம். இவற்றுடன் நாடி நடையையும் வலது, இடதையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது இடகலை, பிங்கலையாகிய தச நாடிகளின் பங்கும் இவ்விடத்தில் செல்வாக்குச் செலுத்தும்.





© 2021, IRJTSR 

***நாடியில் வாத, பித்த, கபம்***

நாடியில் வாத, பித்த, கபங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. வாதநாடி வாத எழுச்சியைத் தோற்றுவிப்பதற்கு உயர எழும்பி கீழே தாவுவது போன்ற நடையினையுடைய பிராணிகளின் நடையை ஒப்பிட்டுக் கூறியுள்ளனர். பித்தநாடி வாதநாடியின் எழுச்சிச் சலனத்திலிருந்து மீட்சியடைவதால் ஊருவது போன்ற நடையை உடைய பிராணிகளின் நடைக்கு ஒப்பிட்டுள்ளனர்.

கபநாடி வாத எழுச்சியையும், பித்த எழுச்சியையும் மறைத்து ஓய்வு கொடுப்பதாலும் அசைந்து அசைந்து சலன முறுவதாலும் அசைந்து நடக்கின்ற பறவையின் நடைக்கு ஒப்பிட்டனர். மேற்சொன்னவைகள் அனுபவத்திலும் அறிவியல் ரீதியாகவும் பொருத்தமாக இருக்கிறது என பேராசிரியர் பு.மு.வேணுகோபால் குறிப்பிடுகின்றார்.

இந்நாடி நடை பற்றித் தேரையர்,

**“அன்ன மயில் குயின்மா வாண்டலையூ ரோதியுள்**
**யன்ன மயில் குயினமா வாண்டலையா – தன்ன மயில்**
**வித்தகரை யாவாயுள் வேதயரா மேனையர் செய்**
**வித்தகரை யாவரிது மெய்”** (யமக வெண்பா, 10)

எனக் கூறுகின்றார். வாத நாடியின் நடை அன்னம், மயில், குயில் என்பவற்றின் நடைக்கும், பித்த நாடியின் நடை வண்டு சுழல்வதற்கும், கோழி நடப்பதற்கும், எறும்பு ஊர்வதற்கும் சேத்தும நாடியின் நடை ஓணான் ஓட்டத்திற்கும், கருடன் வட்டமிடுவதற்கும், ஈ பறப்பதற்கும் ஒப்பாகுமாவதால், இவ்விபரங்களை எவ்வாறு அறிவதென்று மயங்காமல் நுண்ணறிவினால் ஆராய்ந்து தெளிந்தவர்களே வைத்தியர்களாவர். மற்றையவர்கள் பெரு வெள்ளத்தின் முன் கட்டிய மண் கரைக்கு ஒப்பானவர்கள் எனவும் கூறுகின்றனர்.

**“காலையில் வாதநாடி கடிகையிற் பத்தாம்**
**பாலையாம் பித்தநாடி பகருச்சி பத்தாகும்**
**மாலையாம் சேத்துமநாடி மதிப்புடன் பத்தாகும்**
**வாலையாம் மனோன் மணிக்கு வகுத்ததுமே தொகுத்ததாமே”** (வைத்திய சார சங்கிரகம்)

என்னும் பாடலில் மூன்று நாடிகளும் நடக்கும் காலம் சொல்லப்பட்டுள்ளது. சித்த மருத்துவத்தில் வைத்தியம் மேற்கொள்ளுகின்ற போது வாத, பித்த, கபங்களைப் பரிசோதிப்பதற்கு இதற்குரிய காலங்கள் பிரதானமாகக் கணிக்கப்பட்டுள்ளது. காலை ஆறுமணி முதல் பத்து மணி வரையில் வாத மிகுதியும், காலை பத்து மணி முதல் பகல் இரண்டு மணி வரையில் பித்த மிகுதியும், பகல் இரண்டு மணி முதல் மாலை ஆறு மணி வரையில் கப மிகுதிக்கும் உரிய காலமாகும். அதேபோல இரவில் முதல் பத்து கடிகை வாதமும், அதற்குப் பின் பத்து கடிகை பித்தமும், அதற்குப் பின் சூரியோதயம் வரையில் கபமும் நடக்கும். இவற்றிலிருந்து ஒரு தாதுவின் அரசுக்காலம் நான்கு மணித்தியாலயம் என்று கணிக்கலாம். (கடிகை = நாழிகை = 24நிமிடங்கள்) இதே கருத்தை தேரையரும்,

**“வைகறையை நண்பகலை மாலையையே வேவவுயிர்**
**வைகறையை பித்தமுயிர் மாறி முன்போர் வைகறையை**
**மாட முறை கொல் வழிமூ நரம்பினடை**
**மாட முறை கொல் சொலிய மன்”** (யமக வெண்பா – 7)

எனக் கூறுகின்றார்.

*நாடியின் அசாத்திய நிலை*

**“அத்தத்தை நாடி யலையாமல் தீபமுறை**
**அத்தத்தை நாடி யடங்குநெறி – அத்தத்தை**
**கோழி யரையன் கொடி வாய்தேள் ராசாளி**
**கோழியரை யன்றெரிந்து கொள்”** (யமக வெண்பா – 04)

என்ற பாடலினூடாக நாடியின் அசாத்திய நிலையைக் கூறியுள்ளார். சுரம் காயும் போதும், வேறு வியாதி உண்டாகும் போதும் சேத்தும நாடியானது, புலிப்பாய்ச்சலைப் போலவும், தேள் கொட்டுதலைப் போலவும், ராசாளியின் வேகத்தைப் போலவும், கோழி, அன்னம், இவற்றின் நடைகளைப் போலவும் இருந்தால் அவை அசாத்தியக்குறிகளாகும். தீபம் எரிந்து குவியும் தருணத்தில் விசேஷ பிரகாசம் தோன்றுவது போல ஜீவன் ஒடுங்கும் காலத்தில் திடீரென்று இக்குறிகள் உண்டாகும். அக்காலத்தில் சிகிச்சை அளிக்காமல் விடுவது நல்லது என்கிறார் தேரையர்.

*மலப் பரிசோதனை*

நாடி பரிசோதனை போல, வைத்திய முறைகளில் மேலும் பல பரிசோதனைகளின் பின்பே, நோய்களைக் கண்டறிந்து, அதற்குரிய சிகிச்சைகளும் வழங்கப்படுகின்றன. தேரையரும் மலப்பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை, எச்சிற் பரிசோதனை, இந்திரியப் பரிசோதனை முதலான பரிசோதனைகள் பற்றித் தெளிவுறுத்துகிறார். மலப் பரிசோதனை பற்றிக் குறிப்பிடும் தேரையர், நோயாளியின் மலமானது வெள்ளாட்டுப் புழுக்கையைப் போல் கடினமாயும், கருமையாயிருப்பினும் அதமமென்றும், இலைச்சாற்றைப் போன்று நீர் மயமாயிருப்பின் மத்திமமென்றும், சிவந்த பாகு போன்ற நிறமுடையதாயிருப்பின் உத்தமமென்றும், செம்பின் செந்நிறமுடையதாயிருப்பின் உத்தமோத்தமம் என்றும் கூறுகிறார்.

**“சாகப் புழுக்கை தனிலு முறுகுமெனிற்**
**சாகப் புழுக்கையறி சற்று நனிது……”** (யமக வெண்பா – 67)

*சிறுநீர்ப் பரிசோதனை*

சிறுநீர்ப் பரிசோதனை பற்றித் தேரையர்,
**“அருந்து மாறிரதமும் அவிரோதமதாய்**
**அஃகல் அலர்தல் அகாலவூன் தவிர்ந்தழற்**
**குற்றளவருந்தி உறங்கி வைகறை**
**ஆடிக்கலசத் தாவியே காது பெய்**
**தொரு முகூர்த்தக் கலைக்குட்படு நீரின்**
**நிறக்குறி நெய்க்குறி நிருமித்தல் கடனே”** (தேரையர் நீர்க்குறி நெய்க்குறி)

என்று கூறுகிறார். உண்ணுகின்ற அறுசுவைப் பதார்த்தங்களும் விரோதப்படாமல் குறைதலும் அதிகரித்தலும், காலந்தப்பிப் புசித்தலுமாகிய செயற்பாட்டை நிறுத்தி, பசிக்குத் தகுந்த அளவு புசித்து, நித்திரை செய்து விடியற் காலத்தில் படிகப் பாத்திரத்தில் ஆவி போகாத வண்ணம் பெய்து ஒரு முகூர்த்தம் என்கிற நாழிகைக்குட்பட்ட

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2021, IRJTSR 

(ஒன்றரை மணி) நீரில் நிறக்குறியும் எண்ணெய்க் குறியும் பார்த்து, ரோகங்களை நிச்சயித்தல் முறைமையாகும். அன்றியும் அந்நீரில் எண்ணெயை விட்டுப்பார்த்து, காணப்படுகின்ற குறியை நிதானித்தும் சாத்திய, அசாத்திய ரோகத்தை நிதானிக்கலாம் என்கிறார்.

மேலும், சிறுநீரின் பொதுக்குணங்களாக,

**“வந்த நீர்க்கரி எடைமணம் நுரை எஞ்சலென்**
**நைந்திய லுளவவை யறைகுது முறையே”** (தேரையர் நீர்க்குறி நெய்க்குறி)

இழிகின்ற நீருக்கு நிறம், எடை, மணம், நுரை, நாற்றம், உறைதல் என்னும் ஐந்தினையும் சுட்டுகிறார். இவற்றுள் நிறம் பற்றிப் பார்க்கின்,

**“பீதம் செம்மையை கருமை வெண்மையென்**

**றோதைங் கொழுமையை யொத்துரு நீரே”** (தேரையர் நீர்க்குறி நெய்க்குறி)


நீரானது மஞ்சள் - 06வகை, சிவப்பு – 04வகை, பச்சை – 05வகை, கருமை – 04வகை, வெண்மை – 02வகை என ஐந்து நிறங்களில் 21 வகைகள் உள்ளதாகக் கூறுகிறார். இவற்றினைக் கருத்திற் கொண்டே சித்த மருத்துவத்தில் சிகிச்சை வழங்கப்படுகிறது.

நெய்க்குறி பற்றிய தேரையர் கருத்தாவது பின்வருமாறு அமைகிறது.

**“நிறக்குறிக் குரைத்த நிருமாணநீரிற்**
**சிறக்க வெண்ணைய் யோர் சிறுதுளி நடுவித்**
**தென்றுறத் திறந் தொலயே காதமைத்ததி**
**னின்றதிவலையோ நெறி விழியறிவுஞ்**
**சென்றது புகலுஞ் செய்தியையுணரே”** (தேரையர் நீர்க்குறி நெய்க்குறி)

நிறக்குறிக்காக முன் சொல்லிய முறைப்படி செய்வதுபோல், சிறுநீரை எடுத்து வெளிச்சம் படக்கூடிய முறையிலும் நீரின் நடுவில் ஒருதுளி நல்லெண்ணெய்யை குச்சியால் விட்டு, அத்துளி போகும் வழியைப் பார்த்து, நோயினை அறிந்து கொள்வதே நெய்க்குறியாகும். இவ்வாறாக சிறுநீர் பரிசோதிக்கப்படும் போது வாத, பித்த, கபக்குறிகள் எவ்வாறு இனங்காணப்படுகின்றன என்பது பற்றி,

**“அரவென நீண்டிடின.்.தே வாதம்**
**ஆழிபோற் பரவின.்.தே பித்தம்**
**முத்தொத்து நிற்கின்ற மொழிவதென் கபமே”** (தேரையர் நீர்க்குறி நெய்க்குறி)




எனக் கூறுகிறார். அதாவது, மேற்சொன்னவாறு பரிசோதிக்கும் போது, எண்ணெய்யானது பாம்பு போல மிதந்தால் அது வாதக்குறியாகவும், மோதிரம் போலச் சுழன்றால் பித்தக்குறியாகவும், முத்துப்போல் அமைந்தால் கபக்குறியாகவும் அடையாளப்படுத்தப்படும் என்றே தேரையர் கூறுகிறார். வாதம் மிகுந்தால் அண்டவாதம், மலக்கட்டு போன்ற நோய்களும், பித்தம் மிகுந்தால் உடம்பு காந்தல், தலைக் கிறுகிறுப்பு போன்ற நோய்களும், கபம் மிகுந்தால் ஈளை, இருமல் :போன்ற நோய்களும் அடையாளப்படுத்தப்படுகிறது.

***நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்***

வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் சமநிலை குறையும் போதும், கூடும் போதும் நோய்கள் மிகும் என்பது சித்த மருத்தவத்தின் அடிப்படையாகும். இம்மூன்றையும் சமநிலையில் வைத்திருப்பது அவசியமாகும். இம்மூன்றும் தன்னிலை அடைவதற்கும் தேரையர், சில மருத்துவக் குறிப்புக்களைச் சொல்லத் தவறவில்லை.

**“வாத பித்த சேட்ப வகைமூன்று மோர்நிலையில்**
**ஆதரிக்க வேணுமென்றா லச்சவித்து – மாதளைவித்**
**துங்கறியு மொன்றாகத் தொந்நித்து நீரளைதேன்**
**பங்கறியக் கொள்வார் பார்”** (தேரையர் மகா கரிசல் - 717)

என்கிறார். அதாவது, அகத்தி விதை, மாதுளை விதை, மிளகு மூன்றையும் சமஅளவு எடுத்து, பொடியாக்கி அதை நீருடன் கலந்து உண்டால் வாதமும், தயிருடன் சேர்த்து உட்கொண்டால் பித்தமும், தேனுடன் கலந்து உட்கொண்டால் கபமும் தத்தம் நிலை தவறாமல் உடலை நோயின்றி ஆதரிக்கும் என்பதே கருத்தாகும்.

இதேபோல், நோயாளியானவன் சிகிச்சை பலனின்றி இறக்க நேரிடுவதற்கு முன் சில அறிகுறிகள் தென்படும் என்பதையும் தேரையர் பின்வரும் பாடலினூடாக வெளிப்படுத்துகிறார்.

**“நாகநிற முந்தி நகில்வாகு கால்கையிடை**
**நாகநிற முந்தி நடுங்கவாய் - நாகநிறம்**
**வேதியரைத் தேடுவளர் வெண்ணெயென்றக் காவாயுள்**
**வேதியரைத் தேடுவது வீண்”** (யமக வெண்பா – 12)

நாக்கு, தலை, மார்பு, தனம், நாபி, தோள், கால், கை, இடுப்பு என்னும் இவ்வொன்பது அவயங்களும் புன்னைப் பூவின் மத்தியிலுள்ள மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறமுடையனவாகி, முன்னரே நடுக்கமும் கண்டு, நாகத்தின்

சுவாசத்தைப் போல மேன்மூச்செறிந்து, நாவும் முகமும் சாம்பல் பூத்தது போலாகி, பலவித பேதியுமுண்டாகி, அப்பேதியின் மேல் அரைத்துப் பாலேட்டின் மீதுண்டான வெண்ணெய் போல் படர்ந்திருக்கவும் கண்டால் அந்நோயாளியானவருக்குச் சிகிச்சை அளிக்காமல் விடலாம் என்கிறார். அக்குறிகள் இறப்பதற்கானவையாகும்.

***சிகிச்சை முறைகள்***

மருத்துவர்கள் தங்களுக்கு இயற்கையாக உள்ள மனோபலத்தாலும் மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ள பயிற்சியினாலும் உண்டான செயற்கை யூகத்தினாலும் சமயோசிதமாக ஒற்றிட சிகிச்சையை அளித்து வருகின்றனர். ஊமைக்காயங்கள் என்று சொல்லப்படுகின்ற உட்காயங்கள், மூட்டுவலி, வீக்கம், தேகபங்கம் போன்ற நோய்களுக்கான நிவாரணியாக ஒற்றிடம், சித்த மருத்துவத்தில் முதன்மையாகக் கொள்ளப்படுகின்றது. தேரையர் ஒற்றிடச் சிகிச்சைகளைச் செய்யும் முறைகள் பற்றித் தெளிவாகக் கூறியுள்ளார்.

- ✓ பழம் சுண்ணாம்புக் காரையை (ஒரு வகை மூலிகைச்செடி) பொடித்து, ஒட்டிவிட்டு வறுத்துத் துணியில் வைத்துச் சுருட்டி நோயுள்ள இடத்தில் ஒற்றிடமிட அவ்வேதனை தீரும்.
- ✓ ஓமம் அல்லது கொள்ளை வறுத்து ஒற்றிடமிடலாம்.
- ✓ மஞ்சளைத் தூளாக்கி ஓட்டில் வறுத்து ஒற்றிடமிடலாம்.

என்பவற்றை எடுத்துக்காட்டுக்களாகக் கொள்ளலாம்.

**"ஒளிவட்டமான கவுள் செவிநா சிருக்கி**
**ஒக்கலிடுப்பரை ஏக்கல் விடுத்தெறி**
**ஒட்டலர் வெப்பென ஒட்டி வலித்தே**
**ஓதிமெயொப்பென ஒசிநலிப்பிணி**
**ஓழியகற்றுறை ஒருவகை……"** (தேரையர் வைத்தியம் 1001)

என்கிறார் தேரையர்.

***கஷாயம்***

தேரையர், கஷாயத்தின் தன்மைகளை எடுத்து விளக்கும் தன்மையானது, சித்த வைத்தியத்தின் மேன்மையையே சித்திரிக்கிறது எனலாம். உணவு, செயல்களினால் உண்டாகின்ற நோய்கள் நீங்குவதற்கு, அடித்துப் போக்குகின்ற பஞ்சலோகங்களைக் கொண்டு செய்யப்படுகின்ற கஷாய வகைகள் தேக ஆரோக்கியம் அளிப்பனவாயும், நோய் எதிர்ப்பு சக்திகளை அதிகரிப்பனவாயும் கொள்ளப்படுகின்றன. தேரையர் கஷாய வகைகளுக்கு முதன்மை கொடுத்திருப்பது சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பெரிதும் பயனுடைத்தேயாகும். உதாரணமாக,

**"குறி முக்கடுகரி குடசவேர் பணிலவேர்**
**குல்லிவையடுவது குடிநீர் பருகிடிற்**
**குடிலமெனத்தரு குடிலமெலாம் உறும்"** (தேரையர் வைத்தியம் 1001)

என்பதனூடாக, குறிக்கின்ற சுக்கு, மிளகு, திப்பிலி, விஷ்ணுகிராந்தி, வெட்பாலை, சங்கவேர், துளசி இவைகளை ஒன்றாகச் சேர்த்து, காய்ச்சி வடித்தெடுத்த கஷாயத்தைப் பருகினால் உடம்பிலே ஏற்பட்ட இடஞ்சலான நோய்கள் தீரும் என்பதை உணர்த்துகிறார். இதேபோன்று பத்திய முறைகளும் கூறப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தைல வகைகள்

மனிதன் இயற்கையுடன் என்றும் இளமையாக நரைதிரையில்லாமல் இருப்பதற்கும் ஏற்ற தைல வகைகளையும் சித்த மருத்துவத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ளார் தேரையர். முதுமையை வெளிப்படுத்தும் நரை, திரைகளை நீக்குவதற்கு ஏற்ற தைலமாக இதைக் கூறுகிறார். நாவற்பழக்கொட்டையை நீர் சேர்த்துக் காய்ச்ச எண்ணெய் வரும். அதில் வால்மிளகைப் பொடி செய்து, தூவி மீண்டும் காய்ச்சிப் பதமாக இறக்கி, அதை ஒரு மாதம் நேர்மையாக முழுகிவரும்போது நரைதிரைகள் நீங்கி, இளமை பெருகும் என்கிறார்.

***மூலிகை மருந்து***

தேரையர், கண்களில் ஏற்படும் நோய்கள், காதுகளில் ஏற்படும் நோய்கள், இருப்புவாதம், நீரிழிவு மற்றும் பல நோய்கள் பற்றியும் அவற்றிற்கான மூலிகை மருத்துவங்கள் பற்றியும் தெளிவாக்கியுள்ளார். எடுத்துக்காட்டாக, கண்களில் ஏற்படும் ஒரு நோயாகிய மாலைக்கண் நோய் நீங்குவதற்கு செய்யப்படும் சிகிச்சைமுறை பற்றித் தேரையர்,

**"தீரடா தும்பையின் சாறது சேரடா பிழிந்தீர் கரத்தாலிழை**
**பாரடாபரிந் தேயிடுங் கண்ணினுள் மாரடாயந்தி மாலை விட்டோடுமே"** (தேரையர் வைத்தியம் 1001)

என்ற பாடலால் உணர்த்துகிறார். தும்பை என்ற மூலிகைச் சாறு இதற்கு மூலமருந்தாக அமைவதனைக் காணலாம்.

நவீன அறிவியல் யுகத்தில் பலரையும் ஆட்டிவைக்கும் ஒரு நோய் நீரிழிவு. இந்நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது தொடர்பாக பல வைத்திய முறைகளைத் தேரையர் சுட்டுகிறார்.

**"கொண்டுகீழ்விளா கோரையிலையுடன்**
**இரண்டுகீழ்க்காயிலை யிரண்டுபலம்**
**பண்டுவெள்ளாட்டுப் பாலரைமூன்று நாள்**
**புண்டுதானே புழுவிழும்பாரிதே"** (தேரையர் வைத்தியம் 1001)

இப்பாடலில் சுட்டப்பட்டுள்ள பரிபாஷைச் சொற்களை நன்கு விளக்குவதன் மூலம் வைத்தியப் பரிகாரத்தை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் நீரிழிவு நோய்க்கான பத்தியம் தொடர்பாக,

**"உண்டிடுமிருபோ துறவாகவே**
**வெண்டிடுங்குருவி மொழி செய்துடன்**
**கெண்டிடும் நீரிழிவுந் தெறிந்திடும்**
**கண்டிடும் புகையும் புளித்தள்ளிபே"** (தேரையர் வைத்தியம் 1001)

என்று தேரையர் வைத்தியம் 1001 என்ற நூலில் வரும் பாடல் உணர்த்துகிறது.

***சித்த மருத்துவ சிகிச்சையும் இந்து அறிவியல் கூறுகளும்***

மேலும், சித்த மருத்துவ முறையானது இயற்கையோடு சம்பந்தப்பட்டது. ஆகையால் மருத்துவம் செய்யும்போது இயற்கையோடு சம்பந்தப்பட்ட மக்களின் வாழ்வியலில் முதன்மைபெறும் திதி, நாள், நட்சத்திரம், மாதம், இலக்கினம் போன்றவற்றையும் அறிந்து, அதற்கேற்றவாறு மருத்துவம் அளிக்க வேண்டியது சித்த வைத்தியத்தின் அடிப்படையாகும். இது இந்து அறிவியலின் வானசாஸ்திரம், சோதிடம் போன்றவற்றை உள்ளடக்கியதென்றால் மறுப்பதற்கில்லை. இந்நிலையில் தேரையரும் இவற்றிற்கு முக்கியத்துவம் அளித்திருப்பதை அவதானிக்க முடிகிறது.



© 2021, IRJTSR 

**“அஞ்சுபத்து முன்னிருத்தை யாபத்தி ரைசதமி”** (யமக வெண்பா – 13)

என்ற பாட்டால் திதி பற்றியும்,

**“மதியாத வன்மதித்து மத்தியென்று சற்று”** (யமக வெண்பா – 14)

என்பதால் நாள் பற்றியும்,

**“அச்சுவதி கேட்டை யரவுபூ ரட்டாதி”** (யமக வெண்பா – 15)

என்பதால் நட்சத்திரம் பற்றியும்,

**“சித்திரைவை காசி திரமானியாடி மத்தி”** (யமக வெண்பா – 16)

என்பதால் மாதம் பற்றியும்,

**“மாடா பரிவை மகரங்சேயில் வின்மீன்”** (யமக வெண்பா – 17)

என்பதால் இலக்கினம் பற்றியும் கூறியிருத்தலால் சித்தமருத்துவம் செய்வதற்கு அறிய வேண்டியவை எவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

***மருத்துவன் இலக்கணம்***

மருத்துவன் பற்றித் தேரையர் கூறுமிடத்து, மருத்துவன் ஔவைக்குச் சமமானவன் என்கிறார்.

“ஔவைக்கு நேராகி ஔவைக்கு நேராய்
ஔவைப் பருவமெய்தி ஔவைப்பினாடி
ஔவிய மோவுதல் ஆயுளர்க் கியல்பே”

கடவுள் வழிபாட்டிலும் பல நூல்களை நன்கு ஆராய்ந்தறிதலும் ஔவைக்குச் சமமாயும், தன் சொந்தப் பிள்ளைக்கு நோய் வந்தவிடத்து நற்தாயானவள் அந்நோயைத் தீர்க்க எவ்வளவு கவலை, எவ்வளவு அன்பு உடையவனாக இருப்பாளோ அவ்விதமே நோயாளியிடத்தில் இருப்பான். ஔவையின் வயது முதுமைக்கு ஒப்பாக முதிர்ந்த அறிவு மருத்துவனுக்கு இருக்க வேண்டுமென்றும்
உத்தம மருத்துவர்களாக இருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் தேரையர் சேகரப்பா என்னும் நூலிலும் மருத்துவருக்குரிய இலக்கணத்தை,

**“நிறைமற்றத னேர்மை எரித்திடல்
உருகச்செயு மூகை யுரைத்திடல்
அறிமற்றது கூர்மை வைத்திய – முறையாமீ…..”** (தேரையர் சேகரப்பா)

எனனும் பாடல் மூலம் உணர்த்தப்படுகிறது.

தம்மை நம்பியோருக்கும், மருத்துவம் செய்து கொள்வதற்குப் பொன், பொருள் கொடுப்போருக்கும் மருத்துவம் செய்து கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் தேரையர், தேரையர் யமக வெண்பா என்னும் நூலில்,

**“மருத்துவரை நோயினர்த மாதாபி தாவா**

**மருத்துவரை யென்னவாருள் வைக்க – மருத்துவரை**
**கையடை யாளந்தக் காரியசித்தி லென்றுநம்பிக்**
**கையடையா யந்தந்தக் கால்"** (யமக வெண்பா)

என்று குறிப்பிட்டுள்ளார்.

***நிறைவுரை***

ஆகவே, சித்த வைத்தியம் ஆரம்பகாலந்தொட்டு சித்தர் மரபினரால் பேணப்பட்டு வருகின்றது. சித்த வைத்தியமானது வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் சமநிலைகள் கூடிக்குறையும் அளவுகளுக்கேற்ப நோய்கள் உண்டாகின்றன என்பதையும் அவற்றைப் பல்வேறு பரிசோதனைகளின் வழி கண்டறியலாம் என்பதையும் அவற்றிற்கான சிகிச்சைகள், இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் கஷாயங்கள், பத்தியம், தைல வகைகள், சூரணங்கள் போன்ற மருந்துகளின் மூலம் அளிக்கப்படுகின்றன. இத்தகு சித்த வைத்திய மரபில் தேரையரது பங்கும் பணியும் மேலானதாகக் கருதப்பட்டு வருகின்றமைக்கு அவரது சித்த மருத்துவம் சார்ந்த பனுவல்களே சான்றாக அமைகின்றன. தேரையர், வாத, பித்த, கபம் பற்றியும் அவற்றுக்கான பரிசோதனைகளாக நாடிப் பரிசோதனை, மலப்பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை போன்றவற்றையும் சிறப்பாக உரைத்த தன்மை சித்த மருத்துவத்திற்கே உரித்தானதாகும். மேலும் சிகிச்சை முறைகளான ஒற்றிடம், கஷாயம், பத்தியம், குடிநீர், தைலவகைகள் என்பவற்றையும் வைத்தியம் செய்வதற்கு ஏற்ற காலம், இடம், முகூர்த்தம் என்பவற்றை அறிந்து செயற்படும் தன்மையையும், எல்லாவற்றிற்கும் மேலாக மருத்துவன் கொண்டிருக்க வேண்டிய தகுதி, இலக்கணங்கள் பற்றியும் தேரையர் உரைத்திருப்பதானது, சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கும் அதன் நிலைக்களனுக்கும் அவசியமானதெனக் கொண்டு, சித்த மருத்துவ மரபில் தேரையர் மிகமுக்கியமான இடத்தினைக் கொண்டுள்ளார் என்பதை தெளிவுறுத்திக் கொள்ள இடமுண்டு.

உசாவியவை……..


1. இலட்சுமண நாயகர், தேரையர் வைத்தியம் 1001, சென்னை, சாரதா புத்தகசாலை, 1925.
2. முகம்மது அப்துல்லா சாயபு, ஹக்கீம் பா., (1973), இராஜ வைத்திய மகுடமென்னும் தேரையர் அருளிச்செய்த யமக வெண்பா (விருத்தியுரையுடன்), (வெளியீடு கு.வி).
3. தியாகராசன்,ஆர்., தேரையர் வெண்பா மூலமும் உரையும், சென்னை, சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு, 1974.
4. இராமநாதன், பொன்., சித்தமருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், யாழ்ப்பாணம், ஸ்ரீ சாயி ஒவ்செற் பிறிண்டேர்ஸ், கோண்டாவில், 2008.
5. Sambasivam Pillai,V.T., Siddha Medical Dictionary Vol. 04 – Part 02, Chennai – 106, Dept. of Indian Medicine Homoeopathy, 1998.
6. தியாகராசன்,ஆர்., தேரையர் மகா கரிசல் மூலமும் உரையும், சென்னை, சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு, .1974


இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

7. இராமநாதன்.பொன்., மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும், கைதடி, சித்த மருத்துவத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 2009.